அலகு 4

# விதைப்போம் மகிழ்வோம்



இந்தியத் தாய்த் திருநாட்டின் முதுகெலும்பே விவசாயம் என்பதில் யாருக்கும் ஐயமில்லை. விவசாயத்தையும் விவசாயிகளையும் விவசாயம் செய்ய வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தும் விதமாக இப்பாட அலகு வடிவமைக்கப்பட்டுள்ளது. நான்கு நிகழ்வுகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இவ்வலகு கதையும் பாடல்களையும் தன்னகத்தே கொண்டு சிறப்புச் சேர்க்கிறது. இதில் இடம் பெற்றுள்ள செயல்பாடுகள் எளிமையாகவும் ஆர்வத்தைத் தூண்டும் விதமாகவும் அமைந்திருப்பது இதன் மற்றொரு சிறப்பம்சமாகும்.

ஓரிலக்க எண்களின் கூட்டல், கழித்தல், எண்விளக்கம் ஆகியவை இவ்வலகில் இடம் பெற்றுள்ளன. பூஜ்யம் அறிமுகமாகிறது.

+, –, = ஆகிய கணிதக் குறியீடுகளை அறிமுகப்படுத்துகிறோம்.

இச்சின்னங்கள் இடம் பெற்றுள்ள கணித வாக்கியங்களை வாசிக்கவும் உருவாக்கவும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

**இப்பாடத்தின் வாயிலாக அறிமுகமாகும்...**

| | | |
|---|---|---|
| சொற்கள் | : | ஐஸ்வர்யா, தேன், நிலம், பயிர், ஏர் |
| உயிரெழுத்துகள் | : | ஐ, ஏ |
| மெய்யெழுத்து | : | ய், ந் |
| உயிர் மெய் எழுத்துகள் | : | ய, ந |
| ஒலித் துணைக் குறியீடுகள் | : | ே |

பாடவலைச்சட்டம் அலகு 4 விதைப்போம் மகிழ்வோம் (தமிழ்)

| கருத்துகள் | மொழி வெளியீட்டு வடிவங்கள் எழுத்துகள் / மொழிக்கூறுகள் | முதன்மைக் கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| ❖ கேட்ட கதையைக் கூறலாம். | கதை | ❖ கேட்ட கதையைக் கூறுகிறார்கள். |
| ❖ கலந்துரையாடலின் வாயிலாக தனது அனுபவத்தை பங்கு வைக்கலாம். | கலந்துரையாடல் | ❖ தம் அனுபவத்தைக் கூறுகிகிறார்கள்.. |
| ❖ கற்ற எழுத்துகளைப் பயன்ப டுத்தி புதிய சொற்களை உரு வாக்க முடியும். | மொழி விளையாட்டுகள் | ❖ சொற்களை உருவாக்குகிறார்கள்.. |
| ❖ படங்களைப் பார்த்து கதையைக் கூற இயலும். | படக்கதை | ❖ படங்களைப் பார்த்துக் கதை கூறுகிறார்கள்.. |
| ❖ கற்ற எழுத்துகளைப் பயன் படுத்தி உருவாக்கப்பட்ட வாக்கி யங்களை வாசிக்க இயலும். | வாசித்தல் | ❖ வாசிப்புப் பகுதியை வாசிக்கிறார்கள்.. |
| ❖ பாடலை இசையோடு குழு வாகவும் தனியாகவும் பாடலாம். | பாடல் | ❖ பாடலை மெட்டமைத்துப் பாடுகிறார்கள்.. |

**சூழ்நிலையியல்**

| கருத்துகள் | செயல்திறன்கள் | முதன்மைக் கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| ❖ குறிப்பிட்ட சில பகுதிகளில் குறிப்பிட்ட சிலவகைப் பயிர்கள் மட்டுமே விளைகின்றன. | கலந்துரையாடல் | ❖ தனது பகுதியில் விளையும் விளையாத பயிர்களைக் கூறு கிறார்கள்.. |

| | | |
|---|---|---|
| ❖ ஒரு முறையான செயல் வரிசையில் தான் வேளாண்மை நடக்கிறது. | வரிசைப்படுத்தல் | ❖ படங்களை உற்றுநோக்கி வேளாண் வேலைகளை வரிசைப்படுத்து கிறார்கள்.. |
| ❖ ஒவ்வொரு பகுதியிலும் பல் வேறு வேளாண்மைகள் நடை பெறுகின்றன. | கலந்துரையாடல் | ❖ தன் பகுதியில் நடைபெறும் வேளாண் வேலைகளைக் கூறு கிறார்கள்.. |
| ❖ ஒரு பகுதியில் விளையும் பயிர் வேறொரு பகுதியில் விளை வதில்லை. | வகைப்படுத்துதல் | ❖ தனது பகுதியில் விளையக் கூடிய மற்றும் விளையாத பயிர்களை வகைப்படுத்துகிறார்கள்.. |
| ❖ தாவரங்களைச் செடி, கொடி, மரம் என வகைப்படுத்தலாம். சில தாவரங்கள் சில செடியாக வளர்கின்றன. சில கொடியாக படர்கின்றன. சில மரமாக ஓங்கு உயர்ந்து வளர்கின்றன. | அலசி ஆராய்ந்து முடிவுக்கு வருதல் | ❖ தாவரங்களை செடி, கொடி, மரம் என வகைப்படுத்துகிறார்கள். |
| ❖ நவீன கருவிகளைப் பயன் படுத்தி வேளாண்மை செய்வ தால் விளைச்சல் பெருகுகிறது. வேளாண் கருவிகள் வேலை யை எளிதாக்குகின்றன. | கலந்துரையாடல் | ❖ விவசாயக் கருவிகளின் பெயர் களைக் கூறுகிறார்கள். |
| ❖ உழவனுக்கு நன்மை செய்யும் தீமை செய்யும் உயிரினங்கள் உள்ளன. | உற்றுநோக்கல் | ❖ படங்களை உற்றுநோக்கி உழவனின் நண்பர்களையும், எதிரிகளையும் பட்டியலிடுகிறார்கள்.. |

## கணிதம்

### கருத்துகள்

- ❖ இரண்டு சிறிய தொகுப்புகள் சேர்ந்தால் ஒரு பெரிய தொகுப்பு உருவாகும்.
- ❖ இரண்டு தொகுப்புகள் இணைவதைக் கூட்டல் என்கிறோம்.
- ❖ இரண்டு தொகுப்புகளில் உள்ள வற்றை எண்ணிப் பார்த்து அவ்விரண்டு தொகுப்புகளும் சேர்ந்தால் எவ்வளவாகும் என கண்டுபிடிக்கலாம்.
- ❖ கணித வாக்கியங்களை மொழி வாக்கியங்களாக்கலாம்.
- ❖ இரண்டு எண்களின் கூட்டுத் தொகை அவ்வெண்களை விடப் பெரியதாக இருக்கும்.
- ❖ இரு தொகுப்புகள் சேர்வதைக் குறிக்க + என்ற குறியீட்டைப் பயன்படுத்துகிறோம்.
- ❖ இரண்டு பத்துகள் சேர்ந்தால் 20 ஆகும்.

### செயல்திறன்கள்

பொருட்கள், படங்களை உற்றுக்கவனித்தல்.

ஒரே பொருளின் இரு தொகுப்புகளை ஒப்பிடுதல்.

பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுதல்.

நடைமுறைப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுதல்.

பொது முடிவிற்கு வருதல்.

தொகுப்புகளுக்கு பெயரிடுதல்.

எண்களை வரிசைப்படுத்துதல்.

### முதன்மைக் கற்றல் அடைவுகள்

- ❖ இரு சிறிய தொகுப்புகளைச் சேர்த்து ஒரு பெரிய தொகுப்புருவாக்குகிறார்கள். (1–9)
- ❖ பொருட்கள் மற்றும் படங்களைப் பயன்படுத்தி 9 வரையுள்ள இரண்டு தொகுப்புகளின் கூட்டுத்தொகை கண்டுபிடிக்கிறார்கள்.
- ❖ +, = ஆகிய குறியீடுகளைப் பயன்படுத்தி கணித வாக்கியங்கள் எழுதுகிறார்கள்.
- ❖ 20 என்ற எண்ணை இனம் கண்டு கூறுகிறார்கள், எழுதுகிறார்கள்.
- ❖ 20, 30, 40, 50 ஆகிய எண்களை இனம் கண்டு கூறுகிறார்கள், எழுதுகிறார்கள்.
- ❖ 1 முதல் 99 வரை எண்ணுகிறார்கள்; எழுதுகிறார்கள்.

- பத்தின் தொகுப்புகளைச் சேர்த்து புதிய தொகுப்புகள் உருவாக் கலாம்.
- பத்தின் தொகுப்புகளை வரிசைப் படுத்தலாம்.
- பத்தின் தொகுப்புடன் பத்திற்குக் குறைவான தொகுப்புகளைச் சேர்த்துப் புதிய தொகுப்புருவாக் கலாம். அத்தொகுப்புகளை பத்தின் அடிப்படையில் சேர்த் துக் கூறலாம்.
- முன்னால் பின்னால் என்ற கருத்துகளை எண்களைப் பயன் படுத்திக் கூறலாம்.
- வரிசையாக அடுக்கப்பட்டுள் ளதின் இடத்தைக் கண்டுபிடிக்க எண்ணிப் பார்க்கலாம்.
- ஒரு குறிப்பிட்ட எண்தொகுப்பை அவற்றின் மதிப்பின்படி வரிசைப்படுத்தலாம்.
- வரிசையில் இடத்தைக் கூறுகிறார்கள்.
- 100 றிற்கு கீழேயுள்ள எண்களுள் பெரியது, சிறியது கண்டுபிடிக்கிறார்கள்.

அலகு - 4

# விதைப்போம் மகிழ்வோம்

**கதைக்களம்**

நிகழ்வு 1

முன்னொரு காலத்தில் உழவூர் என்ற கிராமத்தில் பொன்னன் என்ற விவசாயி வாழ்ந்து வந்தான். உழவூரில் பல ஆண்டுகளாக மழையே பெய்யவில்லை. அதனால் விவசாயமும் பொய்த்துப் போனது. ஊரே வறுமையில் வாடியது. பொன்னனின் குடும்பமும் பசியால் வாடியது. அவனது குழந்தைகள் பசியால் அழுதன. இதைக் கண்டு சகிக்க முடியாத பொன்னன் உணவு தேடிப் புறப்பட்டான். நடந்தான். நடந்தான். வெகுதூரம் நடந்தான். ஒன்றுமே கிடைக்கவில்லை. பசி மயக்கம்! காதுகள் அடைத்தன! கண்கள் இருண்டன! அப்படியே மயங்கி ஓர் ஆலமரத்தின் அடியில் விழுந்து விட்டான். சற்று நேரம் சென்றிருக்கும் அரை மயக்கத்தில் இருந்த அவன் காதுகளில் மீண்டும் மகள் ஐஸ்வர்யாவின் குரல் கேட்டது.

கதையோட்டம்

நிகழ்வு 1

''அம்மா பசிக்குது'' ஐஸ்வர்யாவின் குரல் கேட்ட விவசாயி வருந்தினான். கண்ணை மூடி இறைவனை வணங்கினான். கண் திறந்தபோது ஒருதேவதை காட்சியளித்தது. தேவதையின் கையில் இரண்டு பொட்டலங்கள். இன்று மட்டும் பசிதீர ஒரு பொட்டலம். காலமெல்லாம் பசி தீர்க்கும் மற்றொரு பொட்டலம். "காலமெல்லாம் பசி தீர்க்கும் பொட்டலம் போதும்'' விவசாயி சொன்னான். பொட்டலத்தை எடுத்துக்கொண்டு வீட்டை அடைந்தான். மனைவி பொட்டலத்தைப் அவிழ்த்துப் பார்த்தாள். கோபத்துடன் தூக்கி எறிந்தாள். விதைகள் சிதறி விழுந்தன. "அம்மா பசிக்குது" ஐஸ்வர்யா மீண்டும் அழத் தொடங்கினாள். தேவதை தோன்றினாள்.

பாடப்பகுதி

நிகழ்வு 2

தேவதை கூறியபடி பயிர் செய்யத் தீர்மானித்தான். தனது நண்பன் வீட்டிற்கும் சென்று நிலத்தை உழுவதற்குத் தேவையான கலப்பையையும் காளை மாடுகளையும் கேட்டான். விளைவதில் ஒரு மூட்டை நெல்தர ஒப்புக் கொண்டான். காளைகளை ஏரில் பூட்டி ஓட்டியவாறு கழனியை அடைந்தான். அவனது வயல் காய்ந்து வறண்டு இருந்தது. ''ஐயோ! இந்த வறண்ட நிலத்தை எவ்வாறு உழுவது?" என்று எண்ணினான்.

கதையோட்டம்

நிகழ்வு 2

‘மழையின்றி விதைகள் முளைக்காதே! நான் என்ன செய்வது?’ விவசாயி தேவதையை நினைத்தான். என்ன ஆச்சரியம்! தேவதையை நினைத்தவுடனேயே காற்று பலமாக வீசத் தொடங்கியது. வானம் கறுத்தது. மின்னல் மின்னியது. இடி இடித்தது. வானில் இருந்து மழை பெய்யத் தொடங்கியது. பொன்னன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. சந்தோசமாக விவசாய வேலைகளைச் செய்யத் தொடங்கினான்.

பாடப்பகுதி

நிகழ்வு 3

பொன்னன் உழைப்பிற்கு நல்ல பலன் கிடைத்தது. கலப்பையும் காளைகளையும் கொடுத்து உதவிய நண்பனுக்கு ஒரு மூட்டை கொடுத்தான். சில மூட்டைகளைச் சந்தையில் கொண்டு போய் விற்றான். கிடைத்த பணத்தில் கலப்பையும் காளை மாடுகளையும் வாங்கிக் கொண்டான். தனது மகள் ஐஸ்வர்யாவை மீண்டும் பள்ளிக் கூடத்தில் கொண்டு போய்ச் சேர்த்தான். அன்று ஞாயிற்றுக் கிழமை நண்பர்கள் மாதவனும் மாதவியும் ஐஸ்வர்யாவின் வீட்டிற்கு வந்திருந்தனர். அவர்களுக்கு உணவு சமைக்க ஐஸ்வர்யா அம்மாவுக்கு உதவியாக இருந்தாள். மாதவனும் மாதவியும் ஐஸ்வர்யாவின் தோட்டத்தைச் சுற்றிப் பார்க்கச் சென்றார்கள்.

கதையோட்டம்

மாதவனும் மாதவியும் பூப்பறிக்கச் சென்றார்கள். பூந்தோட்டம் நிறைய பூக்கள். அப்பூக்களில் தேன் குடியிருக்கும் குருவிகளும் இருந்தன. குருவிகளைப் பார்த்ததும் பதுங்கிப் பதுங்கி சென்றார்கள். குருவிகள் பறந்தன. ஒரு மரக்கிளையில் அமர்ந்தன. கிளை முழுவதும் குருவிகள். மாதவனும் மாதவியும் பூக்களைப் பறித்தார்கள். கூடை நிறைய பூக்களுடன் வீட்டிற்குச் சென்றார்கள்.

பாடப்பகுதி

நிகழ்வு 4

மதிய விருந்து உண்ட மாதவனும் மாதவியும் விடை பெற்றனர். “நல்ல வீடு கட்ட வேண்டும். பிள்ளையின் எதிர்காலத்திற்கு நாலு காசு சேர்க்க வேண்டும்” மனைவி புலம்பினாள். “நமது நிலத்தில் அதிகமாக விளைந்தால் நிறைய சம்பாதிக்கலாம். நான் நாள்தோறும் கடினமாக உழைக்கிறேன். ஆனாலும் விளைச்சல் பெருகவில்லையே!” விவசாயி வருந்தினான்.

கதையோட்டம்

‘விளைச்சல் பெருக என்ன வழி?’ தேவதையிடம் கேட்போம். தேவதையை அழைத்தான். தேவதை வந்தது. “நல்ல மழையும் விதையும் தந்துள்ளேன். நீயும் நன்கு உழைக்கின்றாய். இனி உனக்கு என்ன வேண்டும்?” தேவதை கேட்டது. “என் வேலை எளிதாக வேண்டும். விளைச்சல் பெருக வேண்டும். அதற்கு என்ன வழி?” விவசாயி தயங்கித் தயங்கி கேட்டான். தேவதை சிரித்தது. வழியும் சொன்னது.

பாடப்பகுதி

நிகழ்வு 5

தேவதை கூறியபடி விவசாயக் கருவிகள் வாங்கினான். நெல் தவிர வேறு பல பயிர்களையும், காய்கறிகளையும் பயிர் செய்தான் பொன்னன். மழையும் சரியான காலங்களில் பெய்தது. பொன்னன் பயிர் செய்ததெல்லாம் பொன்னாக விளைந்தது. அறுவடைக்கு ஆட்கள் வந்தனர். ஐஸ்வர்யாவும் தம்பியும் அம்மாவுடன் வயலுக்குச் சென்றனர். அப்பாவிற்கு ஆனந்தம் தாங்கவில்லை. பொன்னன் தன் குடும்பத்துடன் ஆடிப்பாடத் தொடங்கினான்.

“தேன் தேன் தேன்
நிலம் உழுதேன்”
- என்று பாடத் தொடங்கினர்.

கதையோட்டம்

பாடப்பகுதி

நிகழ்வு 6

அறுவடை முடிந்தது விளைச்சல் அமோகமாக இருந்தது. அனைவரும் பொன்னனின் உழைப்பைப் பாராட்டினர். பொன்னனுக்கு நிறைய பணம் கிடைத்தது. தான் விரும்பியபடி அருமையான வீடு ஒன்றை கட்டி முடித்த பொன்னன். நிம்மதிப் பெருமூச்சு விட்டான். ஐஸ்வர்யாவும் தம்பி முகிலனும் புதுமனை புகுவிழாவிற்கு வந்த நண்பர்களுக்கு தங்களுடைய வீட்டைச் சுற்றிக் காண்பித்தனர். விருந்து உண்டனர். பின்னர் விளையாடச் சென்றனர்.

நண்பர்கள் ஒன்று சேர்ந்து விளையாடத் தொடங்கினார்கள்.

கதையோட்டம்

பாடப்பகுதி

### வகுப்பிற்குச் செல்லும் முன்...

கீழ்க்காணும் கற்றல் துணைக்கருவிகளைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.

**காய்கறிகள்** : தக்காளி, கீரை, புடலங்காய், வாழைக்காய், வெண்டைக்காய், சுரைக்காய், காரட், பீட்ரூட்

**விதைகள்** : மேலே கூறியவற்றின் விதைகள், இதர விதைகள்

**சார்ட்** : தாயும் சேயும் கதை
தேன் தேன் தேன் பாடல்

சொல்லட்டைகள், பட அட்டைகள், இதர துணைக்கருவிகள்.



## நுழைவுச் செயல்பாடு

### *காய் எது?*

நோக்கம் :

- ☸ காய்கறிகளைப் பட்டியலிடுதல்

- கொண்டு வந்துள்ள காய்கறிகளைக் காட்டி பெயர்களைக் கூற வாய்ப்பளியுங்கள்.
- குழந்தைகள் சொல்லச் சொல்ல கரும்பலகையில் எழுதுங்கள்.
- பொருத்தமான வாசிப்பு உத்திகளைப் பயன்படுத்தி வாசிக்க வாய்ப்பளித்த பின் கீழ்க்காணும் வினாக்களைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.
    - எந்தெந்த காய்கறிகள் பிடிக்கும்?
    - சமைக்காமலே சாப்பிடக்கூடியவை எவை?

கீழ்க்காணும் காய்கறிப் பாடலை பாடுங்கள்

திங்கள் கிழமை தக்காளி
செவ்வாய்க் கிழமை சிறுகீரை
புதன் கிழமை புடலங்காய்
வியாழக் கிழமை வாழைக்காய்
வெள்ளிக் கிழமை வெண்டைக்காய்
சனிக் கிழமை சுண்டைக்காய்
ஞாயிற்றுக் கிழமை முருங்கைக்காய்
எல்லா நாளும் காய்களை
உணவில் சேர்ப்பது நலமாகும்.



- காய்கறிகளின் படஅட்டைகளைக் காட்டி சரியான சொல்லட்டைகளை எடுத்தல்.
- விதைகளைக் காட்டி எந்தக் காய்கறிகளின் விதை என்று காட்ட வாய்ப்பளித்தல்.

## *கலந்துரையாடல்*

நோக்கம் :

- ☸ வேளாண்மை செய்ய மழை வேண்டும் என்ற கருத்துருவாக்குதல்

- நாம் அதிகமாகச் சாப்பிடும் உணவு எது?
- அது எவ்வாறு நமக்குக் கிடைக்கிறது?
- விவசாயம் செய்ய என்னென்ன வேண்டும்?
- மழை இல்லாமலிருந்தால் விவசாயம் செய்ய முடியுமா? எனக் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

இரசனையோடு கதையோட்டம் 1ஐக் கூறுங்கள். மாணவர்களின் கவனத்தை உறுதி செய்யும் பொருட்டு கதையோட்டத்தைக் கூறும் போது இடையிடையே கேள்விகள் கேட்டு மாணவர்களின் கவனத்தை ஒருமுகப்படுத்த மறவாதீர்கள்.

- ''பிறகு என்ன நடந்திருக்கும்?'' என்று பின் பாடப்பகுதிக்குள் நுழையுங்கள்.

# நிகழ்வு - 1
# பசி ஆற

***பசி ஆற***

நோக்கம் :

- படவாசிப்பு
- பாட வாசிப்பு

- வாசிப்பதைக் கேட்டுப் பாடத்தை வாசித்து கதையைப் புரிந்து கொள்ள வாய்ப்பளியுங்கள்.
- மகள் ஐஸ்வர்யாவின் ''அம்மா பசிக்குது'' என்ற அழுகுரல் கேட்ட விவசாயி என்ன செய்திருப்பார்? என்று கேட்டுக் கலந்துரையாடுங்கள்.
    - குழந்தைகள் கூறுவதைச் சார்ட்டில் எழுதி வாசிக்க வாய்ப்பளியுங்கள்
    - என்ன செய்தார் தெரியுமா? யார் கூறியது சரி என்று பார்ப்போமா? என்று கூறிப் பக்கம் 54, 55ஐப் பார்க்கத் தூண்டுங்கள்.

## அ. பட வாசிப்பு

- பக்கம் 54ல் உள்ளது என்ன மரம்?
- அம்மரத்தடியில் படுத்திருப்பது யார்?
- ஏன் இப்படிப் படுத்திருக்கிறார்?
- பறந்து கொண்டிருப்பது யார்?
- பக்கம் 55-லுள்ள படத்தில் யார் யார் இருக்கிறார்கள்?

- அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

போன்ற வினாக்களைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

### ஆ. பாட வாசிப்பு

“உண்மையில் என்ன நடந்தது தெரியுமா? நான் வாசிக்கிறேன். நீங்களே கண்டுபிடியுங்கள்” என்று கூறிப் பாடப் பகுதியை வாசியுங்கள்.

- அதைத் தொடர்ந்து முன்னர் எழுப்பிய கேள்விகளை மீண்டும் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.
- தேவையெனில் மீண்டுமொருமுறை வாசியுங்கள்.

### இ. சொல்லுங்கள்

தொடர்ந்து **சொல்லுங்கள்** செயல்பாட்டிலுள்ள,

- இனி விவசாயி என்ன செய்வான்?
- நீங்கள் ஐஸ்வர்யாவாக இருந்தால் என்ன செய்வீர்கள்?

என்ற வினாக்களைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள். குழந்தைகள் பாடப்பகுதியில் உள்ள நிகழ்வைப் புரிந்து கொண்டுள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்துங்கள்.

**மாம்பழம்**

மாம்பழமாம் மாம்பழம்
மல்கோவா மாம்பழம்
தித்திக்கும் மாம்பழம்
அழகான மாம்பழம்
அல்வா போன்ற மாம்பழம்
தங்க நிற மாம்பழம்
உங்களுக்கு வேண்டுமா?
இங்கே ஓடி வாருங்கள்
பங்கு போட்டுத் தின்னலாம்.

### ஈ. நான்தான் ஐஸ்வர்யா

- “அம்மா பசிக்குது” என்று கேட்பதைக் குழந்தைகள் நடித்துக் காட்ட வாய்ப்பளியுங்கள்.

### உ. ‘ஐஸ்வர்யா’ வட்டமிடுங்கள்

**சொல்லுங்கள்** செயல்பாட்டிலுள்ள,
‘பாடப்பகுதியில் ஐஸ்வர்யா என்ற பெயர் எத்தனை முறை வந்துள்ளது? வட்டமிடுங்கள்.’
என்ற செயல்பாட்டைச் செய்யத் தூண்டுங்கள். எத்தனை குழந்தைகள் சரியாக வட்டமிட்டுள்ளார்கள் என்பதை மதிப்பிடுங்கள். தொடர்ந்து...
விவசாயி
விதை
தேவதை
பசி
போன்ற சொற்களையும் வட்டமிட வாய்ப்பளியுங்கள்.

- குழந்தைகள் வட்டமிட்டச் சொற்களைக் கரும்பலகை / சார்ட்டில் எழுதி வாசிக்க, சொற்களை / எழுத்துகளை இனம் காண வாய்ப்பளியுங்கள்.

## விதை... விதை

நோக்கம் :

- விதை சேகரிப்பு.
- விதைகளை இனம் கண்டு சொல்லுதல்.

குறிப்பு : இச்செயல்பாட்டைச் செய்யும் முன் குழந்தைகளிடம் இயன்றளவு விதைகள் கொண்டு வர அறிவுறுத்துங்கள்.

### அ. சொல்ல முடியுமா?

- நெல், புளி, பயறு, வெண்டை....... போன்ற சில விதைகளை மேசை மேல் வையுங்கள்.

''நான் அழைப்பவர் மேசைக்கருகில் வந்து இங்குள்ள விதைகளைப் ஒரு நிமிடம் பார்க்கலாம். பிறகு திரும்பி நின்று என்னென்ன விதைகளைப் பார்தேன் என்று சொல்ல வேண்டும்'' என்று சவால் விட்டு விதைகளை இனம் கண்டு கூற வாய்ப்பளியுங்கள்.

### ஆ. சொல்ல முடியுமா?

- இரண்டு நிமிடத்திற்குள் உங்களால் எத்தனை விதை களின் பெயர்களைக் கூற முடியும்?

என்று கேட்டுக் குழந்தைகள் விதைகளின் பெயர்களைக் கூற வாய்ப்பளியுங்கள்.

### விதை உருவம் வரைவோமா?

நோக்கம் :

- விதை உருவம் வரைதல்

- குழந்தைகளைக் குழுக்களாக்குங்கள்.
- உங்கள் வகுப்பிலுள்ள குழுக்களின் எண்ணிக்கைக் கேற்பத் தரையில் மண்வெட்டிகளின் படம் வரையுங்கள்.
- எல்லாக் குழுவிடம் போதுமான விதைகள் உள்ளனவா என்று உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- ''எந்தக் குழு முதலில் மண்வெட்டி விதை உருவம் பூர்த்தி செய்கிறீர்கள் என்று பார்ப்போமா?'' என்று சவால் விட்டு போட்டி நடத்துங்கள்.




## வீட்டிலிருந்து

நோக்கம் :

- பெற்றோரின் பங்கேற்பிற்கு வாய்ப்பு

ஒரு கெட்டி அட்டையில் / சார்ட்டில் வரைந்து பட்டாம் பூச்சியின் விதை உருவம் உருவாக்கி வரத் தூண்டுங்கள்.

### *என்னென்ன விதைகள்?*

நோக்கம் :

- தங்கள் பகுதியில் விளையும் / விளையாத பயிர்களைக் கூறுகிறார்கள்.

**கைவீசம்மா கைவீசு!**

கைவீசம்மா கைவீசு!
கடைக்குப் போகலாம் கைவீசு!
மிட்டாய் வாங்கலாம் கைவீசு!
மெதுவாய்த் தின்னலாம் கைவீசு!
அப்பம் வாங்கலாம் கைவீசு!
அமர்ந்து தின்னலாம் கைவீசு!
பூந்தி வாங்கலாம் கைவீசு!
பொருந்தி யுண்ணலாம் கைவீசு!
பழங்கள் வாங்கலாம் கைவீசு!
பகிர்ந்து தின்னலாம் கைவீசு!
சொக்காய் வாங்கலாம் கைவீசு!
சொகுசாய் போடலாம் கைவீசு!
கோவிலுக்குப் போகலாம் கைவீசு!
கும்பிட்டு வரலாம் கைவீசு!
தேரைப் பார்க்கலாம் கைவீசு!
திரும்பி வரலாம் கைவீசு!
கம்மல் வாங்கலாம் கைவீசு!
காதில் மாட்டலாம் கைவீசு!

இதுவரை நடந்த கதையோட்டத்தைச் சுருக்கமாக் கூறியபின் பாடப்பகுதியை வாசியுங்கள்.

- அதிசய தேவதை யார்?
- அதற்கு என்னென்ன சக்திகள் உள்ளன?

என்று கேளுங்கள்.

கூறுவதற்குச் சிரமப்பட்டால் தேவதையும் விறகு வெட்டியும் கதையைக் கூறுங்கள். தொடர்ந்து,

“விவசாயி என்னென்ன விதைகளைப் பத்திரப் படுத்தியிருப் பான்?” என்று கேட்டுக் குழந்தைகள் கூறுவதைச் சார்ட்டில் எழுதுங்கள்.

- ——— விதையைப் பத்திரப்படுத்தியிருப்பானா?
- ——— விதையைப் பத்திரப்படுத்தியிருப்பானா?

என்று கேட்டுக் கேட்டுச் சார்ட்டில் உங்கள் பகுதியில் விளையும் விளையாத பயிர்களின் விதைகளையும் குழந்தைகள் கூற வாய்ப்பளியுங்கள்.

தொடர்ந்து பாடப்பகுதியிலுள்ள வினாவைக் கேளுங்கள், குழந் தைகள் கூறுவதைப் பட்டியலிட்டு வாசிக்க வாய்ப் பளியுங்கள்.

### முடியும் எழுத்து முதலெழுத்தாகுமா?

நோக்கம் :

- பொருத்தமான சொல்லைக் கண்டுபிடித்தல்.

தேவையான குறிப்புகளைக் கொடுத்து இச்செயல்பாட்டை குழந்தைகளே செய்ய வாய்ப்பளியுங்கள்.

எ.கா. : மாலதி – திவ்யா – யாழினி
பந்து – துப்பாக்கி – கிழவி

### *ஓர் எழுத்தை மாற்றி*

நோக்கம் :

- இனம் கண்ட எழுத்துகளைப் பயன்படுத்த வாய்ப்பளித்தல்.

இச்செயல்பாட்டைக் குழந்தைகளே செய்யட்டும். தேவைப்படின் குறிப்பால் உணர்த்தி உதவி செய்யுங்கள்.

***நானே வாசிப்பேன்***

நோக்கம் :

- நாபிறழ் பயிற்சி

இச்செயல்பாடு நாபிறழ் பயிற்சி செயல்பாடு ஆகும். "நான் வாசிக்கிறேன். கவனமாகக் கேளுங்கள். இதை விரைவாக யார் வாசிக்கிறீர்கள் என்று பார்ப்போம்!" என்று சவால் விட்டு குழந்தைகளை விரைவாகக் கூறத் தூண்டுங்கள்.

1. யாருடைய குடும்பம் பசியால் வாடியது?
2. பசியால் அழுத குழந்தைகளைக் கண்ட பொன்னன் என்ன செய்தான்?
3. வெகுதூரம் நடந்த பொன்னனுக்கு என்ன ஆனது?
4. பொன்னனின் கண்முன்னில் தோன்றியது யார்?
5. தேவதை பொன்னனுக்குத் தந்தது என்ன?

இவ்வலகில் ஐந்து நிகழ்வுகள் உள்ளன. உருவாகும் கதைப் புத்தகத்திற்கு (Evolving Text) ஐந்து சார்ட்டுகள் உருவாகும் அல்லவா? தேவையான வினாக்களும் எதிர்பார்க்கும் பதில்களும் கீழே தரப்பட்டுள்ளன.

**சார்ட் 1**

பொன்னனின் குடும்பம் பசியால் வாடியது.

பொன்னன் உணவு தேடிப் புறப்பட்டான்.

மயங்கி ஆலமரத்தடியில் விழுந்தான்.

தேவதை பொன்னனின் கண்முன்னால் தோன்றியது.

பொன்னனுக்கு தேவதை விதைப் பொட்டலம் தந்தது.

## நிகழ்வு - 2

# விதைத்தான் விளைந்தது

நிகழ்வு ஒன்றின் கதைச் சுருக்கத்தை நினைவு படுத்தியபின் நிகழ்வு 2யின் கதையோட்டத்தைக் கூறுங்கள்.

***விதைத்தான் விளைந்தது***

நோக்கம் :

- படங்களைப் பார்த்து நிகழ்வுகளைக் கூறுதல்.

நிகழ்வு இரண்டின் கதையோட்டத்தின் இறுதியில், "மழையின்றி விதைகள் முளைக்காதே! நான் என்ன செய்வது? விவசாயி தேவதையை நினைத்தான்" என்று கதையோட்டத்தைக் கூறி நிறுத்திய பின் "விவசாயி என்ன செய்திருப்பான்?" என்று கேளுங்கள். குழந்தைகள் தங்கள் கருத்துகளைக் கூறட்டும். 'மழை வந்திருக்கும்' என்று மட்டும் கூறினால்,

மழை எப்படி வந்திருக்கும்? என்று கேட்டு,
அடுத்து என்ன செய்திருப்பான்?
பிறகு என்ன செய்திருப்பான்? என்று கேட்டுக் கேட்டு விவசாய வேலைகளைக் கூற வாய்ப்பளித்து, குழந்தைகள் கூறுவதன் அடிப்படையில் வட்டாரப் பாடம் உருவாக்குங்கள்.

அதை வாசிக்க வாய்ப்பளியுங்கள்.

"பொன்னன் விவசாயி என்ன செய்தான் என்று பார்ப்போமா?" என்று கேட்டு பாடப்பகுதியைப் பார்க்கத் தூண்டுங்கள்.
படத்தைப் பார்த்துக் குழந்தைககள் கூறுவதையும் சார்ட்டில் எழுதுங்கள்.

"நீங்கள் கூறியதற்கும் பொன்னன் செய்ததற்கும் என்னென்ன வேறுபாடுகள் உள்ளன?" என்று கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

## வாசிப்போம்

நோக்கம் :

☸ வாசிப்புப் பகுதியை வாசித்தல்

ஐ

- பாடப்புத்தகத்தில் உள்ள இவ்வாசிப்புப் பகுதியை சார்ட்டில் எழுதி வகுப்பில் தொங்க விடுங்கள்.

  **'ஐ'** என்ற எழுத்திற்கு தனி நிறம் கொடுத்துள்ளீர்கள் அல்லவா?
- இப்பகுதியில் **'ஐ'** என்று தொடங்கும் எத்தனை சொற்கள் உள்ளன?
- குழந்தைகள் தாமாகத் தேடிக் கண்டு பிடிக்கட்டும் அவர்கள் கூறும் சொற்களைச் சார்ட்டில் வட்ட மிடுங்கள்.
- வட்டமிட்ட சொற்களை வாசிக்க வாய்ப்பளியுங்கள்.
- சார்ட்டைக் குழந்தைகள் பார்க்க இயலாதவாறு மறைத்து வைத்த பின், "நான் வட்டமிட்ட சொற்களை யாரால் சரியாகச் சொல்ல முடியும்?" என்று கேட்டு குழந்தைகள் கூற கரும்பலகையில் எழுதுங்கள். **'ஐ'** எழுதும் முறையைக் குழந்தைகள் கவனிக்குமாறு எழுதுங்கள்.

## எழுதுங்கள்

நோக்கம் :

☸ குறிப்பிட்ட சொற்களைத் தேடிக் கண்டு பிடித்தல்.

- குழந்தைகளைக் குழுக்களாக்குங்கள்.
- குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தமிழ் மாதங்கள் உள்ள நாட்காட்டிகளைச் சேகரித்துக் கொள்ளுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு நாட்காட்டியைக் கொடுங்கள்.
- தொடர்ந்து **எழுதுங்கள்** பகுதியை வாசித்துக் காட்டுங்கள்.
- நாட்காட்டியிலிருந்து சரியான மாதங்களைக் கண்டு பிடித்து எழுதட்டும்.

தாத்தா நல்ல தாத்தா
பொக்க வாய்த் தாத்தா
தடியை ஊன்றி நடப்பார்
தச்சரிடம் போவார்.
தாத்தா நல்ல தாத்தா
பொக்கவாய்த் தாத்தா

### வேலைகளை வரிசைப்படுத்துங்கள்

நோக்கம் :

- விவசாய வேலைகளை வரிசைப்படுத்துதல்
- பார்த்தெழுதுதல்

இச்செயல்பாட்டைக் குழந்தைகள் தாமாகச் செய்யத் தூண்டுங்கள். எழுதியதை மதிப்பீடு செய்யுங்கள்.

### உங்கள் ஊரில் விளைவது எது?

நோக்கம்:

- வகைப்படுத்துதல்

'என்னென்ன விதைகள்' என்ற செயல்பாட்டிற்காகத் தயாரித்த சார்ட்டை வகுப்பில் காட்டுங்கள். அப்பட்டியலை மீண்டும் வாசிக்க ஓரிரு குழந்தைகளுக்கு வாய்ப்பளியுங்கள். தேவையெனில் நீங்களும் ஒரு முறை வாசித்துக் காட்டுங்கள். அதனடிப்படையில் குழந்தைகள் இச்செயல்பாட்டைத் தாமாகச் செய்யட்டும்.

### வேலைகளை வரிசைப்படுத்துங்கள்

நோக்கம்:

- விவசாய வேலைகளை வரிசைப்படுத்துதல்.
- பார்த்தெழுதுதல்.

இச்செயல்பாட்டைக் குழந்தைகள் தாமாகச் செய்யத் தூண்டுங்கள் எழுதியதை மதிப்பீடு செய்யுங்கள்.

### ஏயில் தொடங்கும் எத்தனை சொற்கள் உருவாக்க முடியும்?

நோக்கம்:

- கற்ற எழுத்துகளைப் பயன்படுத்தி சொல் உருவாக்குதல்.

**ஒளிந்திருக்கும் வாக்கியங்களைக் கண்டுபிடித்தல்**

இரண்டோ மூன்றோ சின்னச் சின்ன வாக்கியங்களைத் தேர்ந்தெடுங்கள். அவற்றிலுள்ள சொற்களைக் கரும்பலகையில் சிதறி எழுதுங்கள்.

"இதில்..................... இத்தனை வாக்கியாக்கள் உள்ளன. யாரால் அவற்றைக் கண்டுபிடிக்க முடியும்?" என்று சவால் விடுங்கள். குழந்தைகள் கண்டுபிடிக்க முயற்சிக்கட்டும். அதற்கான கால அவகாசம் அளியுங்கள்..

"பரவாயில்லை. நான் ஒவ்வொரு வாக்கியமாகச் சொல்லுவேன் . நீங்கள் அவ்வாக்கியத்தில் இடம் பெறும் சொற்களை இணைத்துக் கோடு வரைந்தால் போதும்." ஒன்றோ இரண்டோ குழந்தைகள் கரும் பலகையில் நீங்கள் சொல்லும் வாக்கியங்களைக் கண்டுபிடித்துக் கோடு இழுக்கட்டும்.

- பாடப் புத்தகத்தில் உள்ள எழுத்து மரத்தைச் சார்ட்டில் வரையுங்கள்.
- குழந்தைகள் எழுத்துகளை இனம் கண்டு வாசிக்க வாய்ப்பளியுங்கள்.
- இனம் கண்ட எழுத்துகளைச் சேர்த்து குழந்தைகள் சொற்களை உருவாக்கட்டும். எழுதட்டும்.
- குழந்தைகள் எழுதியதை மதிப்பிடுங்கள்.

### *உங்கள் ஊரில்*

நோக்கம் :

- ☸ தன் சுற்றுப்புறத்தில் நடக்கும் விவசாய வேலைகளை உற்றுக் கவனித்தல்.
- ☸ கலந்துரையாடலில் கலந்து கொள்ளுதல்.

- "உங்கள் ஊரில் இப்பொழுது என்னென்ன விவசாய வேலைகள் நடைபெறுகின்றன?" என்ற முதல் வினாவைக் கேளுங்கள்.
- குழந்தைகள் கூறும் வேலைகளைப் பட்டியலிட்டு எழுதுங்கள்.
- குழந்தைகள் கூறத் தவறிய வேலைகளையும் நினைவூட்டிப் பட்டியலில் உட்படுத்துங்கள்.
- குழந்தைகள் வாசிக்க வாய்ப்பளியுங்கள்.
- தொடர்ந்து, "உங்களுக்கு என்னென்ன விவசாய வேலைகள் செய்யத் தெரியும்?" என்று கேட்டுக் கலந்துரையாடுங்கள்.
- பட்டியலில் இடம் பெற்றுள்ள அந்த வேலையின் பெயரை (✓) குறியீட்டால் குறிப்பிடுங்கள்.
- குழந்தைகளுக்குத் தெரியாத வேலைகள் எவை என பட்டியலைப் பார்த்துக் குழந்தைகள் வாசிக்க வாய்ப்பளியுங்கள்.

### *குழுவில் சேராதது எது?*

நோக்கம்:

- ☸ உணவுப் பொருட்களை அவை விளையும் தாவரத்தின் அடிப்படையில் இனம் காணுதல்.

- கரும்பலகையில் செடி, கொடி, மரம் ஆகியவற்றின் படம் வரையுங்கள்.

- அவற்றின் கீழ் செடி, கொடி, மரம் என்றெழுதி அவற்றைக் குழந்தைகள் இனம் காண வாய்ப் பளியுங்கள்.
- "நான் ஒரு உணவுப் பொருளின் பெயர் சொல்வேன். நீங்கள் அது எதில் காய்க்குது என்று சொல்ல வேண்டும்" என்று குறிப்பளியுங்கள்.
- தொடர்ந்து,

  **'கத்தரிக்காய்'** என்று கூறுங்கள். குழந்தைகள், **'செடி யில் காய்க்கும்'** என்று பதில் கூறட்டும்.
- இதே போல் கொடியில் மற்றும மரத்தில் காய்க்கும் காய்கறிகள், பழங்களையும் கூறிக் குழந்தைகள் பதில ளிக்க வாய்ப்பளியுங்கள்.
- பாடப்பகுதியிலுள்ள செயல்பாட்டைக் குழந்தைகள் தாமாகச் செய்யட்டும். குழந்தைகள் செய்ததை மதிப் பிடுங்கள்.

**கட்டம்-2**

குழந்தைகள் நீங்கள் சொல்லும் வாக்கியங்களைக் கரும்பலகை யில் சிதறி எழுதியுள்ள சொற் களிலிருந்து கண்டுபிடித்து எழு தட்டும்.

| | | |
|---|---|---|
| பட்டம் | படம் | பாடம் |
| வரை | படி | பார் |

## *பூ - காய் - பழம்*

நோக்கம் :

- பெற்றோரின் பங்களிப்பு
- தாமாகச் சொற்கள் எழுதுதல்

- இச்செயல்பாட்டை வீட்டுச் செயல்பாடாகச் செய்யத் தூண்டுங்கள்.
- குழந்தைகள் செய்துவந்ததை சக மதிப்பீடு செய்ய வாய்ப்பளியுங்கள்.
- இறுதியில் நீங்களும் மதிப்பிடுங்கள்.

## *உங்கள் ஊரில்*

நோக்கம் :

- தன் சுற்றுப்புறத்தில் நடக்கும் விவசாய வேலைகளை உற்றுக் கவனித்தல்.
- கலந்துரையாடலில் கலந்து கொள்ளுதல்.

"உங்கள் ஊரில் இப்பொழுது என்னென்ன விவசாய வேலைகள் நடைபெறுகின்றன?" என்ற முதல் வினாவைக் கேளுங்கள்.

- குழந்தைகள் கூறும் வேலைகளைப் பட்டியலிட்டு எழுதுங்கள்.
- குழந்தைகள் கூறத் தவறிய வேலைகளையும் நினைவூட்டிப் பட்டியலில் உட்படுத்துங்கள்.
- குழந்தைகள் வாசிக்க வாய்ப்பளியுங்கள்.

- தொடர்ந்து,

  “உங்களுக்கு என்னென்ன விவசாய வேலைகள் செய்யத் தெரியும்?” என்று கேட்டுக் கலந்துரை யாடுங் கள். பட்டியலில் இடம்பெற்றுள்ள அந்த வேலையின் பெயரைக் (✔) குறியீட்டால் குறிப் பிடுங்கள்.

- குழந்தைகளுக்குத் தெரியாத வேலைகள் எவை என பட்டியலைப் பார்ததுக் குழந்தைகள் வாசிக்க வாயப்பளி யுங்கள்.

***உங்கள் ஊரில் விளைவது எது?***

நோக்கம் :

☸ வகைப்படுத்துதல்

**என்னென்ன விதைகள்** செயல்பாட்டிற்காகத் தயாரித்த சார்ட்டை வகுப்பில் காட்டுங்கள். அப்பட்டியலை மீண்டும் வாசிக்க ஓரிரு குழந்தைகளுக்கு வாய்ப்பளியுங்கள். தேவையெனில் நீங்களும் ஒரு முறை வாசித்துக் காட்டுங்கள். அதனடிப் படையில் குழந்தைகள் இச்செயல்பாட்டைத் தாமாகச் செய் யட்டும்.

**சார்ட் 2**

பொன்னன் விவசாயம் செய்ய தீர்மானித்தான்.

மழை பெய்யாமல் விவ சாயம் செய்ய முடியாதே என நினைத்தான்.

தேவதையை நினைத் தான். மழை பெய்தது.

1. விதைகள் கிடைத்த பொன்னன் என்ன செய்தான்?
2. வறண்ட நிலத்தைப் பார்த்த பொன்னன் என்ன நினைத்தான்?
3. தேவதையை நினைத்த பொன்னனுக்கு மழை கிடைத்ததா?

# நிகழ்வு - 3
# பூப்பறிக்க வாருங்கள் (கணிதம்)

### கதையோட்டம்

கதையோட்டம் ஒன்றையும் இரண்டையும் சுருக்கமாகக் கூறி நினைவுபடுத்திய பின் கதையோட்டம் 3-ஐக் கூறுங்கள். அதன் இறுதியில்,

- தோட்டம் எப்படி இருந்திருக்கும்?
- அவர்கள் தோட்டத்தில் என்னென்ன பார்த்திருப் பார்கள்?

என்று கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

**ஒன்னு ரெண்டு மூனு**

ஒன்னு ரெண்டு மூனு
ஓணான் எங்கோ கூறு
நாலு அஞ்சு ஆறு
மரத்தின் மேலே பாரு
ஏழு எட்டு ஒன்பது
என்ன அதன் போரு?
ஓணான் என்றே கூறு!

### சேர்ந்தால்...

நோக்கம்:

- இரண்டு தொகுப்புகள் சேர்ந்தால் உருவாகும் கூட்டுத்தொகையைக் கண்டுபிடித்தல்.

பாடப்புத்தகத்திலுள்ள படத்தின் அடிப்படையில் அமைந்த விளையாட்டிது.

- ஐஸ்வர்யா யார்? முகிலன் யார்? யார் யார் கிளிகள் என்று தீர்மானியுங்கள்.
- ஒரு பெஞ்சில் 4 ம் வேறொரு பெஞ்சில் 5 கிளிகளும் இருக்கட்டும், ஒரு பெஞ்சு காலியாக இருக்கட்டும். அக்கிளிகள் சிறகடிக்கட்டும்; அழட்டும்.
- ........ம்............ம் பதுங்கி பதுங்கிச் சென்று டப் என கை தட்டட்டும்.
- அமர்ந்திருந்த கிளிகள் பறந்து போய் காலியாக இருக்கும் பெஞ்சில் அமர முயற்சிக்கட்டும்.

தொடர்ந்து கீழ்க்காணும் வினாக்களைக் கேட்டுக் கலந்துரை யாடுங்கள்.

- பெஞ்சில் அமர முடியாதது ஏன்?
- முதல் கொம்பில் எத்தனை பேர் இருந்தனர்? - 4
- இரண்டாவது கொம்பில் எத்தனை பேர் இருந்தனர்?-5
- புதிய கொம்பில் எத்தனை பேர் இருக்கவேண்டும்?

இதேபோல் எண்ணிக்கையை மாற்றி விளையாட்டைத் தொடர லாம்.






### *தாமாகச் சேர்க்க...*

நோக்கம்:

- இரண்டு தொகுப்புகளைச் சேர்த்து மொத்தம் எத்தனை என்றறிதல்.

தேவையான பொருட்கள் :

- மஞ்சாடி
- புளி/ பயறு விதைகள்
- கற்கள்
- ஒவ்வொரு குழந்தையும் தரையில் இரண்டு சிறு வட்டங்களும் ஒரு பெரிய வட்டமும் வரையட்டும்.
- நீங்கள் முதலில் சொல்லும் எண்ணிக்கைக்கேற்ப முதல் வட்டத்திலும் இரண்டாவது சொல்லும் எண்ணிக்கைக் கேற்ப இரண்டாவது வட்டத்திலும் பொருட்களை எண்ணியெடுத்து வைக்கட்டும்.
- ஒவ்வொரு வட்டத்திலும் எத்தனை வைத்தார்கள் என்பதை தங்கள் சிலேட்டில்/ நோட்டுப்புத்தகத்தில் எழுதிக் கொள்ளட்டும்.
- இரண்டு சிறு வட்டங்களில் வைக்கப்பட்டுள்ள பொருட்களை எடுத்து பெரிய வட்டத்தில் உள்ளது எவ்வளவு என்று எண்ணிப் பார்க்கட்டும்.
- அதைத் தங்கள் சிலேட்டில் எழுதட்டும்.
- எத்தனை எத்தனை பொருட்களைச் சேர்த்தோம், மொத்தம் எத்தனையாவது என்று சொல்லட்டும். உதாரணமாக, 3 விதையும் 4 விதையும் சேர்ந்து 7 விதையானது என்று சொல்லட்டும்.
- இதே போல் வட்டங்கள் வரையட்டும். நீங்கள் குறிப்பிடும் எண்ணிற்கேற்ப புள்ளிகள் வைக்கட்டும். தொடர்ந்து அவற்றை எண்ணிப் பார்த்து பெரிய வட்டத்தில் புள்ளிகள் வைக்கட்டும்.




### *நண்பர்கள் சேர்ந்தால் . . .*

- வகுப்பிலுள்ள மூன்று குழந்தைகளைத் தேர்ந்தெடுங்கள் இவர்கள் நண்பர்கள் என்று அறிமுகப்படுத்துங்கள்.
- “இவர்கள் எத்தனைபேர்?” குழந்தைகள் எண்ணிக் கூற வாய்ப்பளியுங்கள்.
- இவர்களுடன் மேலும் இரண்டு பேரைச் சேர்த்து நிறத்துங்கள்.
- “இப்பொழுது எத்தனை பேர்?” என்று கேளுங்கள் குழந்தைகள் பதிலளிக்க வாய்ப்பளியுங்கள்.

- "3ம் 2ம் சேர்ந்தால் எத்தனை?" என்று கேட்டு குழந்தைகள் பதிலளிக்க வாய்ப்பளித்து,

"3ம் 2ம் சேர்ந்தால் 5 ஆகும்" என்று சொல்லிக் கொண்டே கரும்பலகையில்

3 + 2 = 5 என்று எழுதுங்கள்.

***எண்மாலை***

நோக்கம்:

- ஒரு குறிப்பிட்ட எண்ணைப் பலமுறைகளில் பிரித்தெழுதுதல்.

- ஒரு சரடில் பாசிகளைக் கோர்த்துக் குழந்தைகளுக்கு எட்டும் உயரத்தில் காட்டுங்கள்.
- 3 பாசிகளை ஒதுக்கிக் காட்டுங்கள். அவை எத்தனையென்று குழந்தைகள் எண்ணிக்கூறட்டும்.
- இதை இரண்டு குழுவாக்குவது எப்படி என்று கேளுங்கள்.
- குழந்தைகளே குழுவாக்கிக் காட்ட வாய்ப்பளியுங்கள்.
- அவர்கள் குழுவாக்கியதை 1 உம் 2 உம் மூன்று என்று சொல்லிக் கொண்டே கரும்பலகையில் 1 + 2 = 3 என்றெழுதுங்கள்.
- பிறகு 4 ஐக் குழுவாக்க வாய்ப்பளியுங்கள். குழுவாக்கிக் குழந்தைகள் கூறுவதை, 3+1 = 4, 2+2= 4 என்று சொல்லிக் கொண்டே கரும்பலகையில் எழுதுங்கள்.

தொடர்ந்து வேறு எண்களைக் குழுவாக்கவும், அவற்றை மேற்கூறிய முறையில் எழுதவும் வாய்ப்பளியுங்கள்.

***விளையாடலாம்.***

- 1 முதல் 9 வரை எண்கள் எழுதப்பட்ட எண்ணட்டைகளைக் குழந்தைகளுக்களியுங்கள்.
- குழந்தைகள் வட்டத்தில் ஓடட்டும்.
- நீங்கள் ஒரு எண்ணைக் கூறுங்கள்.
- எந்தெந்த எண்கள் சேர்ந்தால் நீங்கள் கூறிய எண்ணாகுமோ அவ்வெண்கள் உள்ள குழந்தைகள் ஒரு குழுவாகட்டும்.
- உதாரணமாக நீங்கள் கூறிய எண் 8 எனில் 7 உம், 1 உம், 6 உம் 2 உம், 5உம், 3 உம், 4 உம், 4 உம் சேர்ந்து குழுவாகவேண்டும். குழுவாக முடியாத குழந்தை அவுட்.

*மீன் பிடிக்கலாம்*

- வகுப்பறையின் நடுவில் ஒரு வட்டம் வரையுங்கள். இதுவே குளம்.
- மீன்போல் வெட்டியெடுக்கப்பட்ட காகிதத்தில் (9) குண்டூசி குத்தி வையுங்கள். இவை மீன்கள்.
- காந்தம் கட்டப்பட்ட ஒரு தூண்டில் தயாரித்துக் கொள்ளுங்கள்.
- மீன்களை குளத்தில் இடுங்கள். எத்தனை மீன்கள் என்று எண்ணிப்பார்க்க வாய்ப்பளியுங்கள்.
- தூண்டிலை ஒரு குழந்தையிடம் கொடுங்கள்.

அவன் மீன் பிடிக்கட்டும்.

தொடர்ந்து கீழ்க்காணுமாறு வினாக்கள் கேளுங்கள்.

- குளத்தில் இருந்த மீன்கள் எத்தனை? 9
- குமார் பிடித்த மீன்கள் எத்தனை? 1
- இப்பொழுது குளத்திலிருக்கும் மீன் எத்தனை? 8

என்று குழந்தைகளுக்கு மீன் பிடிக்க வாய்ப்பளித்து மேற்குறிப்பிட்ட வினாக்களுகளைக் கேட்டுக் குழந்தைகள் கூறுவதை, இருந்தது-9, பிடித்தது-1 இருப்பது-8 என்று சொல்லிக் கொண்டே கரும்பலகையில்

9 - 1 = 8

8 - 1 = 7

என்று எழுதுங்கள்.

இக் கருத்து உறுதிபட உதவும் வண்ணம் வேறு பொருட்களைப் பயன்படுத்திப் போதுமான கற்றல் அனுபவங்கள் நல்க வேண்டும்.

***பூப்பறிக்க வாருங்கள் (கணிதம் பக்கம் 35)***

**அ. பட வாசிப்பு**

நோக்கம் :

- பட வாசிப்பு

“மாதவனும் மாதவியும் பார்த்த பூந்தோட்டம் எப்படியிருந்தது தெரியுமா? உங்கள் கணிதப் பாடப்புத்தகம் 35-ம் பக்கத்தைப் பாருங்கள்” என்று கூறிக் குழந்தைகள் பாடப்பகுதியைப் பார்க்கத் தூண்டுங்கள்.

தொடர்ந்து கீழ்க்காணும் வினாக்களைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

**கூடுதல் செயல்பாடுகள்**

யாருக்கு அதிகம்?

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |

- இரண்டுபேர் விளையாடும் விளையாட்டிது.
- இருவருக்கும் 9 விதைகள் கொடுங்கள்.
- ஒருவர் மாற்றி ஒருவர் சில்லெறிய வேண்டும்.
- தங்கள் சில்லு விழுந்த எண்ணிற்கேற்ற விதைகளை மாற்றி வைக்க வேண்டும்.
- குறைவான எண்ணிக்கை பெற்ற குழந்தை எவ்வளவு குறைவோ அவ்வளவு விதைகளைக் கூடுதல் பெற்ற குழந்தைக்குக் கொடுக்க வேண்டும்.
- குறிப்பிட்ட முறையில் சில்லெறிய வாய்ப்பளிக்க வேண்டும்.
- இறுதியில் யாரிடம் அதிக விதைகள் உண்டோ அவருக்கு வெற்றி.

- படத்தில் யார் யார் இருக்கிறார்கள்?
- வேறு என்னென்ன இருக்கின்றன?
- மாதவியின் கையில் எத்தனை கூடை இருக்கிறது?
- எத்தனை மரங்கள் இருக்கின்றன?
- மாதவனின் கையில் எத்தனைப் பூக்கள் இருக்கின்றன?

என்று எண்ணிச் சொல்ல வாய்ப்புள்ள வினாக்களைக் கேட்டு பட வாசிப்பு நடத்தி எண்ணிப் பார்க்க வாய்ப்பளியுங்கள்.

### ஆ. எண் இங்கே, பொருள் எங்கே?

நோக்கம் :

- எண்ணுதல்
- எண்ணுரு அறிதல்

எண்ணுரு (1-5) எழுதிய சார்டை வகுப்பில் தொங்கவிடுங்கள்.

படவாசிப்பிற்காகக் கேட்ட வினாக்களைக் கேளுங்கள்.

குழந்தைகள் விடை கூற எண் சார்ட்டில் உள்ள எண்ணைத் தொட்டுக் காண்பிக்க வாய்ப்பளியுங்கள்.

### இ. பக்கம் 36-37

நோக்கம் :

- எண்ணுதல்

எண் சார்ட்டைப் பயன்படுத்துங்கள்.

- குழந்தைகள் குருவிகளை எண்ண வாய்ப்பளியுங்கள்.
- எண் சார்ட்டில் உள்ள எண்களைத் தொட்டுக்காட்ட வாய்ப்பளியுங்கள்.
- மட்டுமல்ல. மஞ்சாடி விதை, புளிய விதை, சிறுகற்கள் குச்சிகள் பயன்படுத்தியும் எண்களை இனம் காண வாய்ப்பளியுங்கள்.
- எண்ணுருக்கள் எழுத வாய்ப்பளியுங்கள்.

### ஈ. பக்கம் 38 - 39

நோக்கம் :

- கூட்டல்

“நான் காட்டும் எண்ணைப் பாருங்கள். அதனடிப்படையில் கற்களை வேகமாக எடுத்து வைப்பது யார் என்று பார்ப்போமா?” என்று சவால் விட்டு குழந்தைகள் நீங்கள் காட்டும் எண்ணிற்கேற்ப கற்களைக் குழுக்களாக்க வாய்ப்பளியுங்கள்.

***பந்தெறியலாம்! வெற்றி பெறலாம்!***

- படத்திலுள்ளது போல் தரையில் வரையுங்கள்.




| | | |
|---|---|---|
| 8 | 1 | 6 |
| 3 | 5 | 7 |
| 4 | 9 | 2 |

- குழந்தைகளை இரண்டு குழுக்களாக்குங்கள்.
- ஒரு குழு ஒரு தடவை இரு முறை பந்தெறிய வேண்டும். அவர்கள் எறியும் பந்துபடும் எண் களைக் கூட்டிக் கொள் ளட்டும்.
- இதேபோல் அடுத்த குழுவும் செய்யட்டும்.
- ஒவ்வொரு சுற்றிலும் எந்தக் குழுவிற்குப் பெரிய எண் கூட்டுத் தொகையாகக் கிடைத் ததோ அக்குழுவிற்கு 1 வெற்றி புள்ளி.

தொடர்ந்து,

"அடுத்தடுத்துள்ள இருவர் சேர்ந்து கொள்ளுங்கள். நான் முதலில் சொல்லும் எண்ணை முதல் ஆளும் இரண்டாவது சொல்லும் எண்ணை இரண்டாவது ஆளும் எடுத்து வைக்கணும்" என்று கூறி எண்ணிற்கேற்ப பொருட்களை எடுத்து வைக்க மூன்றோ நான்கோ வாய்ப்பளித்த பின்,

"உங்கள் இருவரிடமும் உள்ளதைச் சேர்த்து எவ்வளவு என்று எண்ணிச் சொல்ல முடியுமா?" என்று கேட்டு **இரு குழுக்கள் சேர்ந்தால் எண்ணிக்கை கூடுவதை** குழந்தைகள் உணர வாய்ப்பளியுங்கள்.

பின்னர் பக்கம் 38லும் 39லும் உள்ள செயல்பாடுகளை நீங்கள் வாசிக்க வாசிக்கக் குழந்தைகள் தானாகச் செய்ய வாய்ப்பளியுங்கள்.

### பெட்டிக்குள் சொற்கள்

கீழே காட்டியுள்ளது போல் சொற்களை கரும்பலகையில் எழுதுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| ப | ட | கு | தை |
| க | ட் | ட | ம் |
| ட் | கு | டை | மா |
| ட | ப | ழ | ம் |
| ட | ழி | ம | ழை |
| ல் | டை | வ | டை |
| ம் | பை | லை | வா |
| ழை | வ | ய | ல் |

நீங்கள் குறிப்பிடும் சொற்களை வட்டம் அல்லது சதுரம் வரைந்து பெட்டிக்குள் ஆக்கட்டும்.

### கதையோட்டம் (கணிதம்) :

மாதவனும் மாதவியும் தாங்கள் பறித்து வந்த பூக்களை ஐஸ்வர்யாவிடம் காட்டி மகிழ்ந்தனர். "இப்பூக்களைக் கொண்டு முற்றத்தில் ஒரு பூக்கோலம் போடுங்களேன்" அம்மா கூறினாள். ஐஸ்வர்யாவும், மாதவியும் சேர்ந்து பூக்கோலம் போட ஆரம்பித்தனர். சற்று நேரத்தில் ஒரு அழகிய பூக்கோலம் முற்றத்தில் தயாரானது. 'ஆகா! என்ன அருமையான பூக்கோலம்!' மாதவன் பூக்கோலத்தைப் பாராட்டினான். மகிழ்ச்சியில் பாடல் ஒன்றையும் பாடத் துவங்கினான்.

'ஒன்றும் ஒன்றும் இரண்டு
மல்லிகைப் பூக்கள் இரண்டு' என்று பாடத் தொடங்கினர்.

### பூக்கோலம்

நோக்கம் :

- கணிதப் பாடல் பாடுதல்.
- எழுத்துருவை இனம் காணுதல்,

"பூந்தோட்டத்தில் பறித்த பூக்களை மாதவனும் மாதவியும் என்ன செய்தார்கள் தெரியுமா?" என்று கேட்டுப் பாடலை அறிமுகப்படுத்துங்கள்.

- குழுவாகவும் தனியாகவும் பாட வாய்ப்பளியுங்கள்.
- எழுத்துருக்களை வட்டமிட வாய்ப்பளியுங்கள்.
- எழுதவும் வாய்ப்பளியுங்கள்.

### வண்ணம் தீட்டுவோம்

இரண்டோ மூன்றோ நிறங்களை மாற்றி மாற்றிப் பயன்படுத்தி வளையங்களுக்கு வண்ணம் தீட்டட்டும்.

பொன்னனின் உழைப்பிற்கு பலன் கிடைத்ததா?

**சார்ட் 3**

பொன்னனின் உழைப்பிற்கு நல்ல பலன் கிடைத்தது.

## நிகழ்வு - 4

# விளைச்சல் பெருக

### கதையோட்டம்

நிகழ்வு 3 வரையுள்ள கதையோட்டத்தைச் சுருங்கக் கூறி, நினைவூட்டிய பின் நிகழ்வு 4 ஐக் கூறுங்கள்.

அதன் இறுதியில்,
“தேவதை என்ன செய்திருக்கும்?” என்று கேளுங்கள்.

### *வட்டாரப்பாடம்*

குழந்தைகள் கூறுவதை சிறுசிறு வாக்கியங்களாக எழுதுங்கள். வாசிக்க வாய்ப்பளிக்க உதவும் வட்டாரப்பாடம் உருவாக்குங்கள்.

### *விளைச்சல் பெருக*

நோக்கம் :

- வாசித்தல்.
- வாசிப்பதைக் கேட்டு கருத்து உட்கொள்ளுதல்.

“தேவதை என்ன செய்தது என்று கண்டுபிடிக்க **விளைச்சல் பெருக** என்ற பாடப்பகுதியை வாசித்துப் பாருங்கள். யார் முதலில் வாசித்துக் கண்டுபிடித்துக் கூறுகிறீர்கள் என்று பார்ப்போமா?” என்று கேட்டு வாசிக்கத் தூண்டுங்கள்.

குழந்தைகள் வாசித்துப் பார்க்கப் போதுமான கால அவகாசம் கொடுங்கள்.

தொடர்ந்து, நீங்கள் வாசியுங்கள்.

### *கலந்துரையாடுங்கள்*

நோக்கம் :

- வாசிப்பதைக் கேட்டுப் புரிந்து கொண்டதைக் கூறுதல்.

இச்செயல்பாட்டிலுள்ள வினாக்களைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

தொடர்ந்து,

- இவ்வாசிப்புப் பகுதியில் உங்களால் வாசிக்க முடியும் எத்தனை சொற்கள் உள்ளன?
- இவ்வாசிப்புப் பகுதியில் உங்களால் வாசிக்க இயலாத எத்தனை சொற்கள் உள்ளன? என்று கேட்டு வட்டமிடவும், வாசிக்கவும் வாய்ப்பளியுங்கள்.

### உங்கள் ஊரில்

நோக்கம் :

- தன் சுற்றுப்புறத்தில் நடக்கும் விவசாய வேலைகளைக் கூறுதல்.

- இச்செயல்பாட்டில் உள்ள வினாக்களைக் கேட்டு கலந்துரையாடுங்கள்.
- குழந்தைகள் கூறுவதைக் கீழ்வருமாறு சார்ட்டில் பட்டியலிடுங்கள்.

| உழவனின் வீட்டிலுள்ள பொருட்கள் | எளிதாகும் வேலை | மேலும் எளிதாக |
|---|---|---|
| | | |

- "உங்கள் ஊரில் அதிகமாக விளைவது எது?"

என்று கேட்டுக் குழந்தைகள் கூறுவதைப் பட்டியலிடுங்கள். அதை அலசி ஆராய்ந்து அவரவர் ஊரில் அதிகமாக விளைவதைக் கண்டுபிடித்துப் பொது முடிவிற்கு வர வாய்ப்பளியுங்கள்.

### எளிதாக விரைவாக

நோக்கம் :

- தானாகப் பொது முடிவிற்கு வருதல்.

இச்செயல்பாட்டைக் குழந்தைகள் தாமாகச் செய்யட்டும்.

### விளைச்சல் பெருக

நோக்கம் :

- நவீன வேளாண் கருவிகள் பற்றிக் கூறுதல்.

- விவசாயி நவீன கருவிகள் வாங்கிய பின்னர் அவற்றின் உதவியோடு விளைச்சல் பெருக மேலும் என்னென்ன செய்திருப்பான்?
- நவீன கருவிகள் மட்டும் போதுமா?
- தரமான விதை வேண்டாமா?
- பயிர்கள் வேகமாக வளர என்ன செய்திருப்பான்? போன்ற வினாக்களைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

### நண்பர்களும் எதிரிகளும்

நோக்கம் :

- பெற்றோரின் பங்களிப்பை உறுதி செய்தல்.

இச்செயல்பாட்டை வீட்டுச் செயல்பாடாகச் செய்ய வாய்ப்பளியுங்கள். சரியான விடையை மறுநாள் வகுப்பில் கலந்துரையாடி உறுதிப்படுத்திய பின்னர் பாடப்புத்தகத்தில் எழுதிச் சொல்லுங்கள்.

1. விளைச்சல் பெருக தேவதையிடம் என்ன கேட்டான்?
2. விளைச்சல் பெருக தேவதை வழி சொன்னதா?

**சார்ட் 4**

என் வேலை எளிதாக வேண்டும்.

விளைச்சல் பெருகவேண்டும்.

அதற்கு என்ன வழி என்று

தேவதையிடம் கேட்டான்.

தேவதை வழி சொன்னது.

## நிகழ்வு - 5

# தேன் தேன் தேன்

### கதையோட்டம்

இதுவரை நடந்ததைச் சுருக்கமாகக் கூறியபின் இந்நிகழ்விற்கான கதையோட்டத்தைக் கூறுங்கள்.

### தேன் தேன் தேன்

நோக்கம் :

- பாடலை இசையோடு பாடுதல்.

- பாட்டில் இடம் பெற்றுள்ள தேன் என்ற சொல்லை இனம் காணுதல்.

“அவர்கள் மகிழ்ந்து பாடிய பாடலைப் பாடுவோமா?” என்று கேட்டுப் பாடலை அறிமுகப்படுத்துங்கள்.

## சொல்ல முடியுமா?

நோக்கம் :

- சொற்களை இனம் காணுதல்

- இச்செயல்பாட்டிலுள்ள வினாக்களைக் கேளுங்கள்.
- கலந்துரையாடுங்கள்.
- குழந்தைகள் கூறுவதை மதிப்பிடுங்கள்.
- தேவையெனில் தொடர் செயல்பாடுகள் நல்குங்கள்.

## எழுதுங்கள்

நோக்கம் :

- கற்ற எழுத்துக்களைச் சேர்த்து புதிய சொல்லுருவாக்குதல்.

- “யாரால் இச் செயல்பாட்டை விரைவாகச் செய்ய முடியும்?” என்று சவால் விட்டு இச்செயல்பாட்டைக் குழந்தைகள் தாமாகச் செய்ய வாய்ப்பளியுங்கள்.
- மதிப்பிடுங்கள்.

## சொல்ல முடியுமா?

நோக்கம் :

- குறிப்பு எழுதுதல்.

- பாடப்புத்தகத்தில் உள்ள கத்தரிக்காய் மாங்காய் ஆகியவற்றின் குறிப்புகளைப் போல மேலும சில காய்கறிகளின் குறிப்புகளைக் கூறுங்கள்.
- கரும்பலகையில் அல்லது சார்ட்டில் எழுதியும் காட்டலாம். பின் பாடப்புத்தகத்தில் கொடுக்கப் பட்டிருக்கும். (தக்காளி, தேங்காய், திராட்சை) ஆகிய காய்கள் பற்றிய குறிப்புகளைக் குழந்தைகளே கூறட்டும்.

## நான் உருவாக்கிய சொற்கள்

நோக்கம் :

- இதுவரை கற்ற எழுத்துகளைப் பயன்படுத்தி புதிய சொற்கள் உருவாக்குதல்.

**சொல்லுக்குள் சொற்கள்**

இரண்டோ அதற்கு மேற்பட்ட சொற்களோ உள்ள சொற்களைத் தேர்ந்தெடுங்கள். கரும்பல கையில் எழுதுங்கள். நீங்களோ அல்லது குழந்தைகளோ அதை வாசிக்கட்டும்.

பிறகு அதில் இடம் பெற்றுள்ள சொற்களை ஒவ்வொன்றாகச் சொல்லுங்கள். குழந்தைகள் எழுதட்டும். பெரும்பாலும் அனைத்தும் சரி வாங்குவார் களல்லவா!

அடுத்த கட்டமாக அப்படிப் பட்ட சொற்களை நீங்கள் கரும்பலகையில் எழுதினால் குழந்தைகள் தாமாகக் கண்டு பிடித்து அதில் இடம் பெற் றுள்ள சொற்களை எழுதட்டும்.

உதாரணமாக:- திருநெல்வேலி

**கட்டம் -1:**

திரு
நெல்
வேலி

**கட்டம்-2:-**

திரு
நெல்
வேலி
தில்லி
நெல்லி
வேல்

முதலில் இப்படிப்பட்ட ஒற்றைச் சொல்லைப் பயன்படுத்துங்கள். மெல்ல மெல்ல ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களைப் பயன் படுத்துங்கள்.

- இச்செய்பாட்டைக் குழந்தைகள் தாமாகச் செய்ய வாய்ப்பளியுங்கள்.
- மதிப்பிடுங்கள்.

### செயல்திட்டம்

நோக்கம் :

☸ எளிய செயல்திட்டங்கள் செய்தல்.

- குழந்தைகள் விதைகள் சேகரிக்க வாய்ப்பளியுங்கள்.
- அவற்றை இனம் காண மற்றும் பெயர் எழுத வாய்ப்பளியுங்கள்.
- சிறிய நெகிழிப் பைகளில் அவற்றை இட்டு நிரப்பி காகிதத் துண்டுகளில் பெயரெழுதி வைப்பதற்குகேற்ற குறிப்புகள் அளியுங்கள்.
- பெற்றோரின் உதவியுடன் அவரவர் தொகுப்பு உருவாக வாய்ப்பளியுங்கள்.
- மதிப்பிடுங்கள்.

**தொடர் செயல்பாடு :**

வகுப்பில் ஆசிரியர் காண்பித்த எண் விளக்க அட்டையைப் போன்று ஆசிரியர் வகுப்பிற்கு ஆரஞ்சு மிட்டாய் பாக்கட் வாங்கிச் செல்ல வேண்டும். சிறிய துண்டு பேப்பர் களைக் கொடுத்துக் குழந்தை களை 1 முதல் 9 வரை பிடித்த எண்ணை எழுதிவரச் செய்தல்.

### மாதிரியைப் போல் எழுதுங்கள்
### சொற்கள் உருவாக்கலாம்

நோக்கம் :

☸ குறில், நெடில் வேறுபாடு அறிந்து எழுதுதல்.

☸ எழுத்துக்களைப் பயன்படுத்தி சொல் உருவாக்குதல்.

- இச்செயல்பாடுகளை வீட்டுச் செயல்பாடுகளாகக் கொடுக்கலாம்.
- இவற்றைக் குழந்தைகள் தாமாகச் செய்யட்டும்.
- மதிப்பிடுங்கள்.

### சொல்ல முடியுமா?

நோக்கம் :

☸ ெ◌, ே◌ வேறுபாடறிதல்

- இச்செயல்பாட்டை வீட்டுச் செயல்பாடாகச் செய்ய குழந்தைகளுக்கு வாய்ப்பளியுங்கள்.
- மதிப்பிடுங்கள்.

**சார்ட் 5**

பொன்னனின் விவசாயம் செழித்தது.

பொன்னனின் விவசாயம் செழித்ததா?

## நிகழ்வு - 6

# நண்பர்கள் ஒன்று சேர்ந்து பொழுது (கணிதம்)

**தோசையம்மா தோசை**

தோசையம்மா தோசை
சூடான தோசை
அரிசி மாவும் உளுந்து மாவும்
கலந்து சுட்ட தோசை
அம்மா சுட்ட தோசை
ஆக மொத்தம் பத்து
அண்ணனுக்கு இரண்டு
அக்காவுக்கு இரண்டு
அப்பாவுக்கு இரண்டு
அம்மாவுக்கு இரண்டு
பாப்பாவுக்கு இரண்டு
இன்னும் தின்ன ஆசை
-ஆனால்
தட்டில் தோசை உண்டா?

### கதையோட்டம்

இதுவரை நடந்த நிகழ்வுகளைச் சுருக்கமாகக் கூறியபின் நிகழ்வு 6இன் கதையோட்டத்தைக் கூறுங்கள்.

தொடர்ந்து கீழ்க்காணும் வினாக்களைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

- மாதவனும் நண்பர்களும் ஐஸ்வர்யாவின் வீட்டிற்கு ஏன் வந்தனர்?
- என்னென்ன பரிசுகள் கொடுத்திருப்பார்கள்?
- 
- 

போன்ற வினாக்களைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள். இறுதியில்,

“எத்தனை நண்பர்கள் வந்தார்கள்?”

என்று கேட்டு பக்கம் 43ல் உள்ள படத்தில் எண்ணிப் பார்த்து எண் எழுத வாய்ப்பளியுங்கள்.

### இணைப்போம்

நோக்கம்:

- இரண்டு குழுக்கள் சேர்த்தால் என்னவாகும் என்பதைக் கூறுகிறார்கள்.

- தேவையான குறிப்புகள் கொடுங்கள்.
- “முதலில் இணைப்பது யாரென்று பார்ப்போமா?”

என்று சவால் விட்டு இணைக்க வாய்ப்பளியுங்கள்.

- இரண்டு எண்கள் சேர்ந்தால் ஏற்படும் மாற்றத்தைக் குழந்தைகளே எழுத வாய்ப்பளியுங்கள்.

- கற்றலில் பின்தங்கிய மாணவர்களுக்கு **பொருட்களைச் சேர்த்துப் பார்க்க** மேலும் வாய்ப்புகள் அளித்து அவர்களும் இச்செயல்பாட்டைத் தாமாகச் செய்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்துங்கள்.

### *எவ்வாறெல்லாம்?*

நோக்கம் :

☸ எண் விளக்கம்

- எல்லாக் குழந்தைகளுக்கும் குறிப்பிட்ட எண்ணிக்கை உள்ள பொருட்கள் கிடைக்க ஏற்பாடு செய்யுங்கள்.

  (விதை / குச்சி / கல்)

- "உங்களிடமுள்ள பொருட்களை மிக விரைவாக அதிகமான குழுக்களாக்குவது யார் என்று பார்ப் போமா?" என்று சவால் விட்டு குழந்தைகள் தங்களுக்குக் கிடைத்த பொருட்களை இயன்றளவு குழுக்களாக்க வாய்ப்பளியுங்கள்.
- குழுக்களாக்கும் கருத்துருவாகியுள்ளது என்று உறுதிப்படுத்தியபின் பக்கம் 45ல் உள்ள செயல் பாட்டைக் குழந்தைகளே செய்ய வாய்ப்பளியுங்கள்.
- மதிப்பிடுங்கள். தொடர் செயல்பாடுகள் செய்யுங்கள்.

ஒண்ணும் ஒண்ணும் ரெண்டு
ஜப்பான்காரன் குண்டு
ரெண்டும் ஒன்றும் மூணு
ஐயா வீட்டுத் தூணு
மூணும் ஒண்ணும் நாலு
பசு கறப்பது பாலு
நாலும் ஒண்ணும் ஐஞ்சு
பாட்டி தலை பஞ்சு
ஐஞ்சும் ஒண்ணும் ஆறு
தண்ணீர் ஓடும் ஆறு
ஆறும் ஒண்ணும் ஏழு
அழகாய் நீயும் வாழு
ஏழும் ஒண்ணும் எட்டு
பாட்டி சுட்ட புட்டு
எட்டும் ஒண்ணும் ஒன்பது
தண்ணீர் வந்து நிரம்புது
ஒன்பதும் ஒண்ணும் பத்து
நீதான் எந்தன் சொத்து

### *கையில் எத்தனை?*

நோக்கம் :

☸ ஒரு குழுவிலிருந்து குறிப்பிட்ட எண்ணிக்கையை மாற்றினால் ஏற்படும் மாற்றத்தை இனம் காணுதல்

- முன் செயல்பாட்டில் பின்பற்றிய அதே உத்தியைப் பின்பற்றி, **எடுத்து மாற்றினால் என்னவாகும்** என்ற கணிதக் கருத்துருவாக வாய்ப்பளித்தபின் பக்கம் 46இல் உள்ள செயல்பாட்டைக் குழந்தைககளே செய்ய வாய்ப்பளியுங்கள்.
- மதிப்பிடுங்கள். தொடர் செயல்பாடுகள் அளியுங்கள்.

### *ஒளிந்திருப்பது யார்?*

நோக்கம் :

☸ உருவான கருத்தைப் பயன்படுத்தி கணிதச் சிக்கல்களுக்குத் தீர்வு காணுதல்.

- பக்கம் 47இல் உள்ள கணிதச் செயல்பாடுகளைக் குழந்தைகள் தாமாகச் செய்யட்டும்.
- தேவையான குறிப்புகள் நல்கி படத்திற்கு வண்ணம் தீட்ட வாய்ப்பளியுங்கள்.

மணி மணி எங்கே போறே
மணிக்குளத்தில்
மண்ணள்ளப்போறேன்
மண்ணெதுக்கு?
செப்பு செய்ய
செப்பெதுக்கு?
துட்டுப் போட
துட்டெதுக்கு?
மாடு வாங்க
மாடெதுக்கு?
சாணி போட
சாணி எதுக்கு?
வீடு மெழுக
வீடெதுக்கு?
பிள்ளைகள் வளர
பிள்ளகள் எதுக்கு?
பாம்படிக்க
பாம்படிக்கக் கம்பெடுத்தான்
கம்பெல்லாம் சேறு
சேற்றைக் கழுவ
ஆத்துக்குப் போனேன்
ஆத்துலெ நிறைய மீனு
மீன் பிடிக்க
வலையெடுத்தேன்
வலையெல்லாம் ஓட்டை
ஓட்டையை தைக்க
ஊசியெடுத்தேன்
ஊசியெல்லாம் வெள்ளி
உம்பேரு கள்ளி

## பெட்டி இரயில் & படகில் ஏறுவோம்

நோக்கம் :

- குறிப்பிட்ட எண்ணாக எத்தனை சேர்க்க வேண்டும் என்ற கருத்துருவாதல்.
- தேவையான குறிப்புகள் நல்கி இச்செயல்பாட்டைக் குழந்தைகள் தாமாகச் செய்ய வாய்ப்பளியுங்கள்.
- மதிப்பிடுங்கள்.

## துடுப்பில் உள்ள எண்கள்

நோக்கம்:

- எண் வரிசை அறிதல்
- இச்செயல்பாட்டைக் குழந்தைகள் தாமாகச் செய்யட்டும்.

என்று கேட்டு வட்டமிடவும் வாசிக்கவும் வாய்ப்பளியுங்கள்.

## கதையோட்டம்

‘அடுத்த வாரம் ஊரில் திருவிழா! பாட்டி வருவார்கள்.’ முகிலனும் ஐஸ்வர்யாவும் பாட்டியின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்தனர். பாட்டி நிறைய கதைகள் சொல்வார்கள். திருவிழா தொடங்கியது. வடை சுட்டுக் கொண்டிருந்தார்கள். பொன்னன் குடும்பத்துடன் திருவிழாக் காணச் சென்றான். ‘பாவம் பாட்டிக்கு முகிலன் வளர்க்கும் சுட்டிப் பூனையின் விபரம் தெரியாது!’

பாட்டி வெளியே சென்றாள். பூனை பதுங்கிப் பதுங்கி வந்தது. “ஹாய்! நல்ல ருசி!” சுட்டிப்பூனை மேலும் ஒரு வடையைக் கடித்தது. திருவிழாவிற்கு சென்ற அனைவரும் வீடு திரும்பினர். வீட்டுத் திண்ணையில் பாட்டி கவலையோடு அமர்ந்து இருந்தாள். இதைக் கண்ட அம்மா காரணம் கேட்டாள். “நான் வெளியே சென்ற போது சுட்டிப்பூனை வடைகளையெல்லாம் தின்று விட்டது’’ பாட்டி வருத்தத்துடன் கூறினாள். “ஐயோ! அனைவரும் அதிர்ந்தனர். ஆனால் அம்மா பாட்டியைச் சமாதானப்படுத்திவிட்டு பணியாரம் சுட்டாள். அந்தப் பணியாரம் என்ன ஆனது தெரியுமா?

## பாட்டி சுட்ட வடை

நோக்கம் :

- ☸ குறிப்பிட்ட எண்ணிக்கை குறைந்தால் ஏற்படும் மாற்றத்தைக் கூறுதல்

பக்கம் 53ல் வினாக்களை எழுப்பிக் கலந்துரையாடிய பின் இங்குள்ள கணிதப் பிரச்சனைக்குக் குழந்தைகளே தீர்வு எழுத வாய்ப்பளியுங்கள்.

## கட்டங்களை நிரப்புவோம்

நோக்கம் :

- ☸ கற்ற கணிதக் கருத்தைப் பயன்படுத்தித் தீர்வு காணுதல்.

- ◆ இச்செயல்பாட்டை வீட்டுப்பாடமாகச் செய்துவர அறிவுறுத்துங்கள்.
- ◆ குழந்தைகள் எழுதி வந்த தீர்வுகளின் அடிப்படையில் வகுப்பில் கலந்துரையாடுங்கள்.

## பணியாரம்

நோக்கம் :

- ☸ கணிதப் பாடல் உருவாக்குதல்.
- ☸ '0' அறிமுகம்

குச்சி/ கல்/ விதைகள் பயன்படுத்தி ஒரு குறிப்பிட்ட எண்ணியுள்ள பொருட்களின் குழுவிலிருந்து பொருட்களை மாற்றி மாற்றி இறுதியில் பொருட்கள் இல்லா நிலையை உணர்த்துங்கள்.

- ◆ அதேபோல் எண்களைப் பயன்படுத்தியும் செய்யுங்கள்.
- ◆ பாடலின் அடிப்படையில் கலந்துரையாடிக் குழந்தைகள் பாடலில் உள்ள கட்டங்களில் எண்கள் எழுத வாய்ப்பளியுங்கள்.
- ◆ இறுதியாகப் பாடலைப் பாட வாய்ப்பளியுங்கள்.
- ◆ எண்களை மாற்றிப் பாடலைப் பாடவும் வாய்ப்பளிக்கலாம்.

## திருவிழா

நோக்கம் :

- ☸ கற்ற கணிதக் கருத்துகளைப் பயன்படுத்துதல்.

---

அடைப்புக்குள் இருந்து பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(வேலை, வேளை; கோலம், கோளம்; நீலம், நீளம்; காலை, காளை; குலம், குளம்; மூலை, மூளை; கலை, களை; வால், வாள்; புல், புள்; தோல், தோள்; தலை, தழை; மலை, மழை)

கதிரவன் எழும் நேரம் ................

ஏர் உழ வேண்டும் ................

சிந்திக்கத் தேவை ................

சுவர்கள் சேரும் இடம் ................

வாசலில் இடுவது ................

பூமியின் வடிவம் ................

ஓவியம் வரைவது ................

வயலில் வருவது ................

- இச்செயல்பாட்டை வாசியுங்கள்.
- தீர்வு கூற வாய்ப்பளியுங்கள்.
- தீர்வு கூறச் சிரமப்பட்டால் முன்னர் கற்ற கணிதக் கருத்துகளை நினைவூட்டுங்கள்.
- குழந்தைகளே தீர்வுகள் கண்டுபிடிக்கத் தூண்டுங்கள்.
- கண்டுபிடித்தத் தீர்வுகளின் அடிப்படையில் கலந்துரை யாடுங்கள்.

### *வழி கண்டுபிடியுங்கள்*
### *நண்பர் யார்?*

நோக்கம் :

- கற்ற கணிதக் கருத்துக்களைப் பயன்படுத்திப் பிரச்சனைக்குத் தீர்வு காணுதல்.

இவ்விரு செயல்பாடுகளையும் குழந்தைகள் தாமாகச் செய்யட் டும்.

- அவற்றை மதிப்பிடுங்கள்.
- கலந்துரையாடுங்கள்.
- தேவையான மாற்றுச் செயல்பாடுகள் நல்குங்கள்.

**சார்ட் 6**

கிடைத்த பணத்தில் பொன்னன் வீடு வைத்தான்.

இறுதியில் பொன்னன் என்ன செய்தான்?

# பயிற்சித்தாள்

## 1. இணையுங்கள்.

| | | |
|---|---|---|
| இரண்டு | - | 9 |
| ஐந்து | - | 4 |
| ஒன்பது | - | 8 |
| எட்டு | - | 2 |
| நான்கு | - | 5 |

## 2. தவறானவற்றிற்கு வட்டமிடுங்கள்.

9 = 6 + 3,   2 + 7,   8 + 1,   4 + 5,   4 + 6

7 = 3 + 5,   4 + 3,   2 + 7,   1 + 6

5 = 7 – 2,   9 – 4,   8 – 3,   6 – 2

## 3. சரியான விடையுடன் பொருத்துங்கள்.

| | | |
|---|---|---|
| 9 – 4 | = | 1 |
| 2 + 7 | = | 7 |
| 6 – 5 | = | 6 |
| 3 + 4 | = | 9 |
| 3 + 3 | = | 5 |

## 4. ‘ ஏ ’ யில் தொடங்கும் சொற்கள்.

## 5. ‘ ஐ ’ யில் தொடங்கும் சொற்கள்.

## 6. ‘ தை ’ யில் தொடங்கும் சொற்கள்.

**7. ‘ கொடி’ யில் வளர்வதை வட்டமிடுங்கள்.**

மா, பலா, திராட்சை
கத்தரிக்காய், பாகற்காய், வெண்டைக்காய்

**8. விடுகதைக்கு விடை எழுதுங்கள்.**

அப்பன் சொறியன்; அம்மா சடையச்சி; பிள்ளை சக்கரைக்குட்டி. அது என்ன?

**9. உரையாடல்.**

நீங்கள் ஒரு விவசாயியாக இருந்தால் என்னென்ன செய்வீர்கள்?

**10. வாசித்தல்.**

ஆடி மாதம் அடை மழை
வீடு வீடு வாடகை வீடு
தாடி வைத்த மாமா, அவர் மாடி வீட்டு மாமா.